## தே.மு.தி.க. நிறுவனர்

# கேப்டன் விஜயகாந்த் நினைவு நாள்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைத்தளப் பதிவு!

சென்னை, டிச. 29-

தேசிய முற்போக்கு திராவிடக் கழக நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின்நினைவுநாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**'கேப்டன்' விஜயகாந்த் நினைவு நாள், ஏழை மக்கள் மீது பெரும் பரிவு கொண்டு, அனைவருக்கும் உதவும் தன் உயர்ந்த உள்ளத்தால் தமிழ் மக்களின் அளவில்லாத அன்பைப் பெற்ற எனது அருமை நண்பர் தே.மு.தி.க. நிறுவனர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் நற்பணிகளை நினைவு கூர்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.12.2025) கேப்டன் விஜயகாந்த் அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கோயம்பேட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தே.மு.தி.க. பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், பொருளாளர் எல்.கே.சுதீஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

---

## 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம் கடந்த வாரம் வரை

# 800 முகாம்கள் நடத்தப்பட்டு 12.34,908 பேர் பயன்பெற்றுள்ளனர்!

### சென்னை கண்ணகி நகரில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, டிச.28-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம் கடந்த வாரம் வரை 800 முகாம்கள் நடத்தப்பட்டு 12,34,908 பேர் பயன்பெற்றுள்ளனர். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின்கீழ் 37,445 அங்கீகரிக்கப்பட்டுள்ள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்கள் 46,657 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் சென்னை கண்ணகி நகரில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமினை பார்வையிட்டு தெரிவித்தார்.


மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (27.12.25) பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகிநகர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமினை ஆய்வு மேற்கொண்டார். பிறகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

#### "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆகஸ்ட் திங்கள் 2ஆம் தேதி சென்னையில் ஒரு மிக பெரிய வகையிலான புதிய மருத்துவ திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். "நலம் காக்கும் ஸ்டாலின்" என்கின்ற திட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதிலும் இருக்கின்ற அனைத்து வட்டாரங்களிலும் வட்டாரத்திற்கு 3 என்கின்ற வகையிலும் சென்னை பெருநக ராட்சியில் 15 இடங்களில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநராட்சிகளில் தலா 4 என்கின்ற வகையிலும், 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட மாநகராட்சிகள் 19 வட்டாரங்களிலும் தலா 3 என்கின்ற வகையிலும், 1,256 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த முகாம்களைப் பொறுத்தவரை நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற முகாம் வெறும் மருத்துவ முகாமாக மட்டுமல்லாமல் முழு உடல் பரிசோதனை என்கின்ற வகையில் இன்றைக்கு தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு இடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. அந்த வகையில் தமிழ்நாடு முழுவதும் 21வது வாரத்தில் 26வது முறையாக இன்று முகாம்கள் நடைபெற்று வருகிறது.

இன்று சென்னையோடு இணைந்து 31 மாவட்டங்களில், 44 இடங்களில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்கள் நடைபெற்று வருகிறது. மேலும் இது வரை 800 முகாம்கள் நடத்தப்பட்டு, இதன் மூலம் முழு உடல் பரிசோதனை என்கின்ற வகையில் முழு



மையாக மருத்துவ பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை 12,34,908 பேரும் முழு உடற் பரிசோதனை என்கின்ற வகையில் மகத்தான பலனைப் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற சீரிய திட்டத்தில் இந்த முகா ம்களில் பயன் பெறுபவர்கள் அங்கிகரிக்க பட்ட காப்பீட்டு திட்டத்திற்கான அட்டைகளையும் உடனடியாக பெற்று செல்கிறார்கள். அவர்கள் மட்டுமே இந்த முகாம்களின் வாயிலாக 37,445 பேர் பயன் பெற்றுள்ளனர்.

#### மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகள்

மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளும் இம்முகாமில் வழங்கப்பட்டு வருகிறது. இந்த சான்றிதழ்கள் பெற்றிருந்தால்தான் அரசாங்கத்தின் சார்பாக வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகை எளிதாக கிடைக்கும். இதற்கு முன்பு மாற்றுத்திறனாளிகள் சான்றிதழ்கள் பெறுவதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவகத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் அலுவகத்திற்கு சென்றால் மட்டுமே வாங்க முடியும்.

அந்தவ கையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த முகாம்களில் விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக மாற்றுத்திறனாளிகள் சான்றிதழ்கள் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்ட நிலையில் மாற்றுத்திறனாளிகளுக்கும் இந்த முகாம்களில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் பயன் பெற்றுள்ள மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை 46,657. மேலும் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் என்கின்ற திட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாட்டில் 38 மாவட்டங்கள் இருந்தாலும் இதில் 7 மாவட்டங்களில் தற்போது வரை இந்த பணி முடிவு பெற்றுள்ளது.

மயிலாடுதுறை, நீலகிரி, மயிலாடுதுறை, பெரம்பலூர், காஞ்சிபுரம், திருப்பத்தூர், மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 7 மாவட்டங்களில் இந்தபணி முழுமையாக முடிவு பெற்றுள்ளது. மீதமுள்ள 31 மாவட்டங்களில் இன்று ஒரே நாளில் 44 இடங்களில் இம்முகாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்று காலை 10.30 மணி நிலவரப்படி 9,951 பேர் மருத்துவ முகாமில் பயன் பெற்று வருகின்றனர்.

#### சிறப்பு மருத்துவ சேவைகள்

இந்த முகாம்களை பொருத்தவரை பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மன நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், கதிரியக் கவியல் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சித்தா மற்றும் இந்திய முறை மருத்துவம் என்று 17 வகையான மருத்துவம் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமில் வழங்கப்பட்டு வருகிறது.

இதை பொறுத்தவரை அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் முழு உடல் பரிசோதனைகள் செய்யப்பட்டு அவர்களுக்கான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளி களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் பதிவு செய்தல் போன்ற பல்வேறு பணிகள் இம்முகாமில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு கடந்த வாரம் வரை 11 முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. 12வது முகாம்களாக இன்று சென்னை கண்ணகிநகரில் முகாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்னையில் மட்டும் இதுவரை 26,893 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மேயர் திருமதி. ஆர். பிரியா, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், தெற்கு வட்டாரதுணைஆணையாளர் அஃதாப் ரசூல், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், கூடுதல் இயக்குநர் மரு.சம்பத், மண்டல குழுத் தலைவர் மதியழகன், நகரநல அலுவலர் மரு.ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஸ்டிக்கர்பாடி...



சசிகலா காலில் விழுந்து
கை மாத்தா வாங்குன
கட்சியின் மீது
"அதிபர் எடப்பாடி" ன்னு
ஸ்டிக்கர் ஒட்டுன யோக்கியன்
தானே நீ…

"மீசை வச்ச ஆம்பளயா இருந்தா
வேட்டி கட்டுன ஆம்பளயா
இருந்தா வா" ன்னு ஏகத்துக்கும்
கூவிப்புட்டு அடுத்து வந்த இடைத்தேர்தல்களில்
களத்துக்கே வராம கம்பி நீட்டிய தொடை நடுங்கி
நீ தானே..

மிஸ்டர் முகமூடி

நீ பேரு மட்டும் வச்சிப்புட்டு
சோறு வைக்காம
கம்பி நீட்டுன பல திட்டங்களுக்கும் சேர்த்தே உயிர் கொடுத்தது
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின்
திராவிட மாடல் ஆட்சி தான்..

அதுக்கு பேரு ஸ்டிக்கர் ஒட்டுறது கெடையாது..

அது வன்மம் இல்லாத பொறுப்புணர்வு..

அப்படிப் பார்த்தா தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட
கோயம்பேடு மார்க்கெட் தொடங்கி பன்நோக்கு
மருத்துவமனை வரை எண்ணற்ற
பல திட்டங்கள் ஏராளமான
பாலங்கள் பலவும்
தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டு அ.தி.மு.க.
ஆட்சியில் ரிப்பன் வெட்டப்பட்டது தானே..

இதெல்லாம் உமக்கு எங்கே விளங்கப் போகுது..

சார்வாள்
நீங்களே கம்பராமாயணத்தை
சேக்கிழார் பேர்ல ஸ்டிக்கர் ஒட்டிய மேதை அல்லவோ…

என்னநாஞ்
சொல்றது!



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதயநாளை முன்னிட்டு 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா 153வது வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.பஷீர் ஏற்பாட்டில் வார்டு–153, போரூர், வன்னியர் தெருவில் நேற்று 28.12.2025 மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவி வழங்கினார். இந்நிகழ்வில் வட்ட கழக செயலாளர் தீ. சார்லஸ், த.பாலாஜி, நரேன் கணபதி, என். நடராஜன், எஸ்.முரளி, விஜயா, பால் ரவி, பொன் ராமசாமி, டி.ஸ்டாலின் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதியில் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பது மற்றும் திருத்தம் செய்வது தொடர்பாக நடைபெற்று வரும் சிறப்பு முகாம்களைப் பார்வையிட்டு, அம்முகாம்களில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் குறித்து முகாம் அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி கிழக்கு பகுதி 8 வது வார்டு திருமுல்லைவாயில் பகுதியைச் சார்ந்த மாற்றுக் கட்சியினர்க்கு 50 மேற்பட்டோர் திராவிட முன்னேற்ற கழகத்தில் மாவட்ட கழகச் செயலாளரும் சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில் இணைந்தார்கள். இந்நிகழ்ச்சியில் வட்டக் கழக செயலாளர் துளசிங்கம் சக்திவேலன் உள்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.